## 120 கிராம் தங்கம் மற்றும்

# 2937 பயனாளிகளுக்கு ரூ.1.51 கோடியில் நல உதவிகள்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கி பேச்சு!



**சேலம், பிப். 6-**

**சேலம் மாவட்டம், சங்ககிரி ஸ்ரீ வாசுதேவ் மஹாலில், 2,937 பயனாளிகளுக்கு ரூ.1.51 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் மற்றும் 120 கிராம் தங்கம் வழங்கும் விழா சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.**

முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (04.02.2026) விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் 1.80 இலட்சம் புதிய பயனாளிகளுக்கு சமூக பாதுகாப்பு திட்ட பயன்கள் வழங்கும் நிகழ்ச்சியினை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சேலம், மாவட்டம், சங்ககிரி ஸ்ரீ வாசுதேவ் மஹாலில் இவ்விழா, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி மற்றும் சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்விழாவில் 2,937 பயனாளிகளுக்கு ரூ.1.51 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் மற்றும் திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் 120 கிராம் தங்கம் வழங்கி சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்கள் பொது மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு சிறப்பு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக அரசின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கிலும், அத்திட்டங்களை பொதுமக்கள் எளிதாக பெற வேண்டும் என்ற வகையிலும் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு அதன் மூலம் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, முதலமைச்சர் அவர்களின் சிறப்பு திட்டமான ”உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் 1.80 இலட்சம் புதிய பயனாளிகளுக்கு சமூக பாதுகாப்புத்திட்ட பயன்கள் வழங்கும் விழாவினை முதலமைச்சர் அவர்கள் விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் தொடங்கி வைத்தார்கள். உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் நோக்கமானது தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கு அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் மற்றும் திட்டங்களை அவர்கள் வசிக்கும் பகுதிக்கே சென்று வழங்குவதாகும்.

இத்திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் 15.07.2025 முதல் 14.11.2025 வரை நகர்புறப் பகுதிகளில் 168 முகாம்களும், ஊரகப் பகுதிகளில் 264 முகாம்களும் என மொத்தம் 432 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத் துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 துறைகளைச் சார்ந்த 46 சேவைகளும் வழங்கப்பட்டு 1,36,409 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளது.

மேலும், பொதுமக்களின் உடல் நலனைப் பேணும் வகையில், நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் மருத்துவ சேவைகளும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காப்பீட்டு அட்டை கோரிய 14,026 நபர்களுக்கு காப்பீட்டு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஆதார் சேவையின் கீழ் 11,645 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

சேலம் மாவட்டத்தில் ”உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கோரி வரப்பெற்ற 1,53,051 விண்ணப்பங்களில் தகுதியின் அடிப்படையில் 83,241 விண்ணப்பங்கள் ஏற்பு செய்யப்பட்டு, புதிய பயனாளிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் நிகழ்ச்சி முதலமைச்சர் அவர்களால் 12.12.2025 அன்று சென்னையில் துவக்கி வைக்கப்பட்டதை தொடர்ந்து சேலம் மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் முதற்கட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ் 5,49,268 பயனாளிகளும், இரண்டாம் கட்டத்தில் 83.241 பயனாளிகளும் என மொத்தம் 6,32,509 பயனாளிகள் பயன் பெற்று வருகின்றனர். மேலும், தற்போது வரை சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 2,06,071 பயனாளிகள் பயன்பெற்று வந்த நிலையில், இன்று முதல் கூடுதலாக 7,303 புதிய பயனாளிகள் சேர்த்து மொத்தமாக 2,13,374 பயனாளிகள் பயன் பெறுகின்றனர்.

சேலம் மாவட்டத்தில் ”உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு பல்வேறு நிகழ்ச்சிகளின் மூலம் பயனாளிகளுக்கு நலத்திட்ட பயன்கள் வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து இன்றைய தினம், வருவாய்த்துறையின் சார்பில் 2,777 பயனாளிகளுக்கு ரூ.94,10,698/– மதிப்பிலும், மாவட்ட வழங்கல் துறையின் சார்பில் 100 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 1 பயனாளிக்கு ரூ.1,00,600/– மதிப்பிலும், தொழிலாளர் நலத்துறையின் சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.1,32,400/– மதிப்பிலும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.77,088/– மதிப்பிலும், தாட்கோ சார்பில் 8 பயனாளிகளுக்கு ரூ13,000/– மதிப்பிலும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், வேளாண்மை பொறியியல் துறையின்சார்பில் 11 பயனாளிகளுக்கு ரூ.10,33,123/– மதிப்பிலும், கூட்டுறவுத்துறையின் சார்பில் 4 பயனாளிகளுக்கு ரூ.11,25,000/– மதப்பிலும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.2,20,555/– மதிப்பிலும், மகளிர் திட்டம் சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ24,40,000/– மதிப்பிலும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 15 பயனாளிகளுக்கு ரூ.5,50,500/– மற்றும் திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் 120 கிராம் தங்கம் என மொத்தமாக 2,937 பயனாளிகளுக்கு ரூ.1.51 கோடி (ரூ.1,51,02,464/–) மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் பொதுமக்களின் நலனுக்காக வழங்கும் இத்தகைய திட்டங்களை அனைத்து தரப்பு மக்களும் பெற்று பயனடைய வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இவ்விழாவில், சங்ககிரி வருவாய் கோட்டாட்சியர் செல்வி ம.மு. தே.கேந்திரியா, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) திருமதி ஜானகி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி செண்பகவள்ளி, எடப்பாடி நகர் மன்றத் தலைவர் டி.எஸ்.எம்.பாஷா, சங்ககிரி வருவாய் வட்டாட்சியர் திருமதி வாசுகி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




